# ஆத்ம ஜோதி.



முந்தா தரவி லவன்புகழ் பூதியு முற்றுஞ்சொன்ன
எந்தாய் அருணகிரி நாத என்னைநீ என்றருளே.

சோதி 1 | விரோதி ௵ வைகாசி ௴ | சுடர் 7

# ஆத்ம ஜோதி.

## பொருளடக்கம்.


| | விஷயம் | பக்கம் |
|---|---|---|
| 1 | அருணகிரிநாதர் தோத்திரம் | 185 |
| 2 | முருகா! முருகா! முருகா! | 186 |
| 3 | அருணகிரிநாதரின் அற்புத வாழ்க்கை | 187 |
| 4 | எந்தவாழ்வுவேண்டும் | 192 |
| 5 | அருணகிரிநாதரும் சமரசமும் | 193 |
| 6 | முத்திவீட்டின்...........மித்திருக்களுமாவர் | 196 |
| 7 | கற்ளுேரது கல்வியில்...........பேசுதல் | 200 |
| 8 | இடுகாடு வயிறன்று | 202 |
| 9 | குரு | 203 |
| 10 | அவதார புருஷர்களது...........நாவாய்கள் | 205 |
| 11 | சாதனுவாரம் | 208 |
| 12 | சாதகற்குத் துணை | 211 |
| 13 | கந்தரனுபூதி | 213 |
| 14 | திருக்கேதீஸ்வர ஆலயத்திருப்பணி | 214 |
| 15 | மக்கட்கு அறிவுரை | 215 |
| 16 | செய்தித் திரட்டு | 216 |



ஆத்ம ஜோதி — ஓர் ஆத்மீக மாத வெளியீடு

கௌரவ ஆசிரியர்: க. இராமச்சந்திரன்.

பதிப்பாசிரியர்: நா. முத்தையா

விலாசம்: ஆத்ம ஜோதி நிலையம், நாவலப்பிட்டி, (சிலோன்)

சந்தாவிபரம்:

ஒருவருடம் ரூ. 3/- ஆயுள் சந்தா ரூ. 75/- தனிப்பிரதி ச. 30


ஓம்

# ஆத்ம ஜோதி

"ஓங்கார மாகி யொளியா யுயிர்க்குயிராய்
நீங்காதான் இன்ப நிறைவு."—சுத்தானந்தர்.


சோதி 1 | விரோதி௵ வைகாசி௴ | சுடர் 7


## அருணகிரிநாதர் தோத்திரம்.

அரிபிரமர் தேடரிய ஆதியரு ணசலத்
தமர்ந்தபெரு மாள்கிருபையால்
அவ்வரும் பதியிலே அவதரித் தருணகிரி
நாதனெனும் நாமம் பெற்ருய்
அரிவையர்க ளின்பமே மோட்சமென் றவர்தம்மை
அணைந்துவாழ்ந் தலைந்துநொந்து
அக்காவின் உபதேசந் துக்கத்தை மூட்டவே
ஆவியை நீக்கவெண்ண
குருவாக முருகன்வந் தருள்சுரந்தாட் கொளக்
குற்றமில் குணத்தனுய்
குமரனின் பெருமையைக் குவலய மறிந்திடக்
கூறுதல்நின் பணியாக்கி
தெரிவரிய வேதமுடன் ஆகமப் பொருளெலாந்
தெளிவான தேனுக்கினை
திருப்புகழோ டனுபூதி திருவகுப் பென்றபல
திவ்வியதமிழ் தருதேவனே!

—க இ:

## முருகா! முருகா!! முருகா!!!

'குமரகுருபர முருகசரவண' என்றெப்போதும் தியானிப்பவர் அருணகிரி. விதிவசத்தால் இளமையில் விலைமாதர் வசமாகிப் பெருநோயும், வறுமையும், ஊர்ப் பழியுஞ் சுமந்தார். உடல் வாழ்வை வெறுத்தார். வல்லாளராஜன் கோபுரத்திலிருந்து 'முருகா சரணம்' என்று முறையிட்டுத் தற்கொலைசெய்துகொள்ளக் கீழே குதித்தார். முருகா! நீ அன்பனைக் காத்தனை. காட்சியளித்தனை. வினையொழித்தனை. அரிவைப்பித்தனை, அறிவுச்சித்தனாக்கினை. புதுவாழ்வளித்தனை. அருள்வாக்கீந்தனை. மோனத்திருத்தி ஞானந்தந்தனை, இன்பவெள்ளமே தமிழிசையாக நடமாடிப் பொசிவது போலவே உனதருளால் அருணகிரியின் வாக்கு எமக்குத் திருப்புகழை ஈந்தது. உனதருள் வந்தபின் அருணகிரியின் ஆசைத்தினவும், அகமாயமும் ஒழிந்தன. வேசையர் மினுக்கும் முயற்சியும் வீணாயின. முருகா! எமது மனத்தைப்பற்றியலைக்கும் அரக்கரை உனது சுடர் வடிவேலாற் குத்தியெறி. முருகா! முருகா! முருகா!

சுத்தானந்த பாரதி

# அருணகிரிநாதரின் அற்புத வாழ்க்கை.

—:—:—

(ஆசிரியர்)

மந்திரமலையை மத்தாகவும் வாசுகி யெனும் நாகத்தைக்கயிறாகவும் கொண்டு தேவர்களும் அசுரர்களும் அமிர்தம் வேண்டிப் பாற்கடலைக் கடைந்ததாகக் கூறப்படும் புராணக்கதையில் அரிய யோக தத்துவங்களும் மிக நுட்பமான நவீன பௌதிக சாஸ்திரக் கருத்துக்களும் அடங்கியிருப்பது போலவே, இமயம் உயர மேரு தாழ்ந்ததெனவும், விந்தியம் உயர இமயம் தாழ்ந்து, பின்னர் அகத்தியரின் தென்னாட்டு வருகையால் மறுபடியும் இமயம் உயர்ந்தது எனவும் கூறப்படும் புராணக்கதைகளில் நுட்பமான ஞாலநூல் (GEOLOGY) உண்மைகளும், எமது சமயங்களின் ஆரம்பத்தை விளக்கக்கூடிய. சரித்திர ஆராய்ச்சிக்குப் பெரிதும் பயன்படக்கூடிய, அருங்கருத்துகளெல்லாம் அடங்கியுள்ளன. ஆதித்தியவாதிகள் இந்திரவாதிகளானதும், பின்னர் இவ்விரு கூட்டத்தினரும் அக்கினிவாதிகளாய் மாறி, இறுதியில் சிவவாதிகளானதும் இப்புராணங்கள் விளக்கும் நிலைமாற்றங்களில் மறைந்துகிடக்கும் உண்மைகளாகும் அவை கூறும் அதல, விதல சுதலப் பிரதேசங்களெல்லாம் பண்டையோர் காலத்து இப்பூமண்டலத்திலிருந்த இடப்பிரிவுகளேயன்றி ஆகாயத்திலோவுள்ள பாதாளத்திலோவுள்ள இடங்களல்ல.

இன்று ஆசியாக்கண்டத்திற்கு இமயம் முகடாகவும் மத்தியாகவும் இருப்பது போல் அன்று விந்தியத்தை வட எல்லையாகக் கொண்டு மகேந்திரத்தின் தெற்குமுனை வரைக்கும் பரந்து விரிந்து கிடந்த பிரதேசத்திற்கு, அருணாசலமென அழைக்கப்படும் திருவண்ணாமலையே முகடாகவும்பூமத்தியாகவும் அமைந்திருந்ததாகும். இந்த உண்மையை, அருணாசல மாகாத்மியத்தில்,

"அதுவே தல மருணாசலந்தலம்யாவிலுமதிக
மது பூமியினிதயம் மறியதுவே சிவனிதயப்
பதியாமொருமருமத்தலம் பதியாமவனதிலே
வதிவானொளிமலையா நிதமருணாசலமெனவே"

என்று நந்திதேவர் வற்புறுத்தியுள்ளார். "ஆதி அருணாசலம் அமர்ந்த பெருமானே" யென அருணகிரிநாதர் பாடியிருப்பதும் இங்கு கவனிக்கவேண்டிய விஷயமாகும். இந்தக்கண்டத்தில் ஆதியில் பரவியிருந்தது சிவமதம் ஒன்றே யென்பது ஆராய்ச்சியாளர் முடிபு.

'தென்னாடுடைய சிவனே போற்றி'
எந்நாட்டவர்க்கும் இறைவாபோற்றி,

என்ற மணிவாக்கிலும் இதே உண்மை மிளிர்கின்றது. இச்சிவமதத்தைச் சுத்தமாக்கி எட்டுத்திக்கிலும் பரப்பிய பரம ஆசிரியனே குமாரசுவாமியாவர். அவரால் திருத்தியமைக்கப்பட்ட சமரஸ நெறி அவர் பெயரையே தாங்கி குமாரசமயம் என்றழைக்கப்பட்டது, பல்லாயிரம் ஆண்டுகட்கு பின்னர் சிவமதம் சைவசமயமாகப் புனருத்தாரணஞ் செய்யப்பட்டபோது, குமாரசமயம் கௌமாரமாகி சைவசமயத்தினுட் சமயங்களுள்ஒன்றாய் மாற்றப்பட்டதெனலாம். எனினும், கௌமாரமானது வைதிக மதமென்ற நிலையை இழக்கவில்லை. சாக்தம், காணாபத்தியம், வைரவம் முதலானவை மலினப்பட்ட சைவமென அழைக்கப்பட்டபோது, குமாரசமயம் கௌமாரம் குற்றம் நீங்கிய சுத்த சிவ அத்துவித மார்க்கமாகவே கருதப்பட்டு வந்தது. இது போன்ற பலகாரணங்கள் பற்றியே முதல் குருவடிவாந்தட்சிணாமூர்த்திக் குரிய பெருமையையும் மகிமையையும் சிவகுருநாதனை முருகப்பெருமானுக்கும் உரித்தென்றனர் அறிஞர்.

இக்கௌமாரமதத்தின் பெருமையை எடுத்துலகுக்குவிளக்க வந்த ஆசிரியர்கள் பலர். அவர்களுள் முதலானவர் சிவபெருமான்; முக்கியமானவர் அருணகிரிநாதர். பிந்தியவரே முந்தியவர்தான் முதலாவது கௌமாராசாரியர். என்ற உண்மையைத் தமது பாடல்கள் மூலம் நன்குவிளக்கியுள்ளார். கந்தரநுபூதியின் கடைசியான (101ம்) வாழ்த்துப்பாட்டை, "பேழ்வாயரவும் பிறைவெள்ளிறகுஞ் சூழ்வார் சடையார் தொழுதேசிகனே" என முடித்திருப்பதை இங்கு அன்பர்கட்கு நினைவூட்டுகின்றோம்.

இவ்விரு ஆசிரியர்களுக்கிடையே பலர் தோன்றி முருகன் புகழைப்பாடியுள்ளனர்.



"வசிட்டர் காசிபர் தவத்தான யோகியர்
அகத்ய மாமுனி இடைக்காடர் கீரனும்
வகுத்த பாவுறு பொருட் கோலமாய் வரு முருகோனே"

எனக் காலத்தைத் தழுவிய நாம வரிசையைத் தருகின்றது திருக்கோணமலைத் திருப்புகழ். அருணகிரிநாதருக்குப் பின்னரும் பலர் தோன்றி முருகன் பெருமையைப் பாடியுள்ளனர். ஆனால், அவருக்கு முன்னும் பின்னும் தோன்றிய மகான்களுக்குமிடையே ஓர் பெரிய வித்தியாசமுண்டு. அவர்கள் முருகனைப் புகழ்வதோடு நின்றுவிடவில்லை; ஏனையமூர்த்திகளையும் வழுத்தியுள்ளனர். அருணகிரிநாதரோ முருகன் ஒருவனையே போற்றியுள்ளார். இந்த உண்மையை ஸ்ரீ பாம்பன குமரகுருதாசர் அருணகிரிநாதர்மீது பாடிய துதியில், "சேயோன், ஒருவனையே புகழ்ந்தவருளருணகிரி சேவடிப்போதுளத்துள் வைப்பாம்" எனக் குறிப்பிட்டுள்ளார்.

இந்த முறையில் முருகோபாசனையில் தனக்கு ஒப்பாரும் மிக்காரும் இல்லாத்தனிச்சிறப்புற்ற நம் அருணகிரிநாதர் பிறந்தது ஞானத்தபோதனரைத் தொன்றுதொட்டு இன்றுவரைக்கும் தன்னிடம் அழைத்துக் கொண்டிருக்குந் திருவண்ணாமலையிலாகும். அங்கே வசித்த கணிகை யொருத்தி வயிற்றில் பட்டினத்துப் பிள்ளையார்க்குப் பிறந்தாரெனத் தமிழ் நாட்டில் வழங்குங் கதை கெஞ்சமும் பொருத்தமற்றதாகும். அவரது பாடல்களைக் கொண்டே அவரது காலத்தை நாம் நிச்சயிக்கவேண்டும். பிரபுடதேவனென்னும் அரசனைப் பாராட்டும் வரிகள் திருப்புகழிற் காண இருப்பதால், அந்தப் பேருடைய மன்னன்காலமே அருணகிரி நாதரின் காலமுமாகும். அத்தோடு, அந்த அரசனும் இவரின் புகழுரைக்காளாவதற்கு ஓர் முருக பக்தனாய் விளங்கியிருக்க வேண்டும். இம்முறையில் தமிழ் நாடெங்கும் கீர்த்திபடைத்தபிரபுடதேவன் விஜயநகரத்திலிருந்து பதினைந்தாம் நூற்றாண்டில் அரசாண்ட மன்னன் ஒருவனே. எனவே, அருணகிரிநாதர் இற்றைக்கு ஐஞ்ஞூறு வருஷங்கட்கு முன்னர் வாழ்ந்தவரெனக்கொள்ளலாம்.

பூர்வ ஜென்ம வாசனையின் பயனாக தமது இளமைப்பருவத்தில் விலைமாதர் போகத்தினுழன்று, குட்டம் முதலாம் நோய்களால் வருந்தி வாடி' தமக்கையாரின் உபதேசங் காரணமாகச் சிற்

றின்பத்தில் வெறுப்புற்றுப், பின்னர் முருகன் திருவருள் பெற்று அப்பெருமானைப் போற்றிக் கவி பாட வல்லவராயினாரென அவர் சரிதையிற்காண்கின்றோம். அவர்இயற்றியதிருப்புகழ்களேஇதற்குப் போதிய அத்தாட்சிகளாயுள்ளன. அருணகிரிநாதர் பெண்ணுலகின் மீது வசை புராணம் பாடியுள்ளாரெனப் பலர் குறை கூறுகின்றனர். இக்கூற்று அந்த மகானின் வாழ்க்கை வரலாற்றையும், கழிவிரக்கங்கொண்டு அவர் அழுத அழுகையையும், அவரது பரோபகார உள்ளக் கனிவையும் விளங்காமையால் உதிக்கும் தவறான அபிப்பிராயமாகும். அவர் இழித்துக் கூறியிருப்பது வேசையர்களையே யன்றிப் பிறபெண்களையல்ல. தம்மைப்போல் பிறரும் காமக்குழியில் வழுக்கி விழுந்து துன்பத்திலழுந்தக்கூடாது, பெண்ணைக்காமக்கூடாகக் சுருதப்படாது என்று நல்லறிவுறுத்தவே, அவர் ஆண், பெண் இருபாலரையுந்தயவு தாட்சண்யமின்றிக்கண்டித்துள்ளார். போலித்துறவையும் அவர் அதே முறையில் கண்டித்தனர். ஒவ்வொரு மகானும் தமது காலத்திலிருந்த கெட்ட வழக்கங்களையும், கொள்கைகளையும், சமுதாய ஊழல்களையும் ஒழுக்கமின்மையையும் கண்டிப்பதைத் தமது முக்கிய கடமையாகவே கருதி வாழ்ந்துள்ளனர்.

அருணகிரிநாதர் அருளிய பாடல்கள் பல. அவற்றுள், திருப்புகழ்களே பதினாயிரமாகும். திருவகுப்பு கந்தரந்தாதி, வேல்விருத்தம், மயில் விருத்தம், கந்தரலங்காரம், கந்தரனுபூதி ஆகியவை அவரது ஏனைய பிரபந்தங்கள். அவரது நூல்களைப் படிக்கும்போது, அவர் வட மொழி தென்மொழி இரண்டிலும் வித்துவானாய், மந்திர தந்திர சாஸ்திரங்களெல்லாம் நன்கறிந்தவராய், எல்லாக்கலைகளிலும் விற்பன்னராய், அத்துவித உண்மையை அனுபூதி வாயிலாக உணர்ந்த பெரிய ஞானியாய் விளங்கினாரென்பது வெளிப்படையாகின்றது. இச்சிறப்புக்களையெல்லாம் அவர் 'கரவாகிய கல்வியுளார் கடைசென்று, இரவாவகையில்', முருகன் அருளாலேயே பெற்றனர் இந்த அரிய உண்மையை 'யாமோதிய கல்வியும் எம்மறிவும் தாமே பெற வேலவர் தந்தது' என நன்றியுடன் வெளியிட்டு, உலகினரையும் அதே முறையில் வாழும்படி வற்புறுத்தியுள்ளார்.

இறைவனருள் கொண்டு பாடல்கள் இயற்றும் பக்தர்கள்மீது பொறாமை கொள்வது பண்டித உலகிலுள்ள பெரியதோர் குறை



யாகும். இது தொன்று தொட்டு என்றுமேயுள்ள கீழ்க்குணம். எமது மொழியில் யாப்பிலக்கணம் என்னும் நூல் இருப்பதையே கேள்விப்படாத சிலர் தங்கள் பக்தி முதிர்ச்சியிலோ அல்லது விசுத்திசக்கர மலர்ச்சியிலோ கேட்போர் உள்ளத்தை உருக்கக்கூடிய அரிய தோத்திரப்பாக்களை இயற்றுகிறார்கள். பண்டிதர்கள் அவற்றில் குற்றமே காண்பர், எதிலாவது குணங்காணும் கண் அவர்கட்குக் குருடாய் விட்ட காரணத்தால். பதினைந்தாம் நூற்றாண்டிலும் இவ்விதம் குணம் நீக்கிக்குற்றமே காணுங்குழுவினர் வாழ்ந்தனர். தமிழ்த்தெய்வமாம் முருகனின் கட்டளைகொண்டு அருணகிரிநாதர் அருளிய பாடல்களில் குற்றங் காணத்துணிந்தனர் பலர். அவர்களுள் இருவர் அவர் சரித்திரத்தில் இடம்பெற்றுள்ளனர். ஒருவர் வைஷணவப்புலவராம் வில்லிபுத்தூராழ்வார்; மற்றையவர் சமண சமயியான சம்பந்தாண்டார். முந்தியவர் கந்தரந்தாதியின் ஐம்பத்துமூன்றாம் பாட்டிற்குக் கருத்துச் சொல்லமுடியாமல் மயங்கித் தமது அகங்காரமொழிந்தனர், பிந்தியவரும் வாதில் தோல்வியுற்றனர். ஆனால் கபடமுறையில், அருணகிரிநாதரைக்கிளியுருக்கொண்டு பாரிஜாதமலர் தேடச்செய்துவிட்டு அவரது தேகத்தை எரித்துவிட்டனர். இவ்விதம் பெற்ற கிளியுருவிலிருந்து பாடிய பிரபந்தங்களே கந்தரலங்காரமும் கந்தரனுபூதியும்.

அருணகிரிநாதரின் பாடல்களில் சொல் நயம், பொருள் நயம், பத்திரசம், மந்திரசக்தி இவற்றோடு கூடி சந்த நயம் பொருந்தியிருக்குஞ் சிறப்பை வேறு எந்தத் தமிழ்ப் பிரபந்தங்களிலுங் காணமுடியாது.

''வாக்கிற் கருணகிரி வாதவூரர்கனிவில்
தாக்கிற் றிருஞான சம்பந்தர்—நோக்கிற்கு
நக்கீர தேவர் நயத்துக்குச் சுந்தரனார்
சொற்குறுதிக் கப்பரெனச் சொல்''

என்பது ஓர் பெரிய அறிஞர் வாக்கு தேவார திருவாசகங்களின் கவி நயத்தையும் பக்திச்சுவையையும் அனுபவிப்போர் சைவர்கள் மாத்திரமே. அருணகிரிநாதர் பாடல்களோ வெனில் திருக்குறளைப் போல் தமிழ்மக்கள் சகலருக்கும் சாதிமத பேதமின்றிப் பொது மறையாய் அமைந்துள்ளதெனலாம். முருகன் எல்லாச் சமயத்தவ

ர்க்கும் உரிய கடவுள் என்பதே அருணகிரிநாதரின் உள்ளக்கிடக்கை. சமய பேதங்களையும் வாதங்களையும் மறுக்கும் மொழிகளை அவரது பாடல்களிற் பரக்கக்காணலாம். எனவே, அவர் ஓர் ஒப்பற்ற கௌமாராசாரியராய் விளங்கியதோடு நின்று விடாது, உலகுக்கு உய்வழி காட்ட சர்வமத சமரச ஞான குருவாயும் விளங்கினரெனலாம்.

இந்தச் சுடரின் அட்டையை அலங்கரிக்கும் அருணகிரிநாதர் உருவம் திரு. R, முத்துசுவாமியவர்களின் 18×12 அளவுப் பலவர்ணப் படத்திலிருந்து எடுக்கப்பட்ட புகைப்படமாகும். இப்பெரிய படம் வேண்டுவோர்:—சென்னை, பந்தர் தெரு 54ம் இலக்கமுள்ள விலாசத்திற்கெழுதிப் பெற்றுக்கொள்ளலாம். இந்த அன்பரின் முயற்சியால் சென்ற மாசந்தொடக்கம் 'அமிர்தவசனி' என்னும் ஓர் தெய்வீக மாதப்பத்திரிகை தோன்றியிருப்பதை 'ஆத்மஜோதி' வாசகர்கட்கு மகிழ்ச்சியுடன் தெரிவிக்கின்றோம். அதைப்பற்றிய மதிப்புரை அடுத்த சுடரில் வெளிவரும்.

——:——

### எந்த வாழ்வு வேண்டும்.

"சுதந்திர ஜீவன்"

பறவையொடு மிருகாதி இறைவனைப் போற்றிடும்
பழிபகையு மின்றி வாழும்
பகுத்தறிவு பெற்றும் பெருதவன் போலவொரு
பாவியிப் பாரி லுண்டோ
அறிவுநூல் கேள்வி ஆராய்ச்சியென் றிவைகளால்
ஆணவக் கோட்டை கட்டி
அதிலிருந் தன்புதவம் அறமென்று பேசுவேன்
அவைகளென் வாழ்வி லில்லை
பொறிகளுக் கிரைதேடி மனமெனுங் குதிரையிற்
பூலோக பவனி வருவேன்
பொன்னாதி மூவாசை யாவும் துறந்தவொரு
புனிதனைப் போல் நடிப்பேன்
நெறிதப்பி ஓடுமென் நெஞ்சைத் திருப்பியுன்
நினைவிலே நிற்க வருள்வாய்
நித்தியானந்தமே முத்திமுதலே ஞான
நிலயமே கருணை வாழ்வே.

# அருணகிரிநாதரும் சமரசமும்.

(திரு, வி. க.)

தமிழ் நாட்டாரென்று சிறப்பாகக் கூறுதற்குப் பல காரணங்களுண்டு அவைகளுள் ஈண்டு இரண்டொன்று குறிக்கிறேன். இயற்கையிலுள்ள முருகை முதல் முதல் கண்டவர் தமிழ் நாட்டார். முருகனுக்குரிய செவ்வாய்க் கோளுக்குந் தமிழ் நாட்டுக்குந் தொடர்பு உண்டு. முருகனுண்மைகண்டு, இயற்கை வாழ்வு செலுத்தி, நோன்பு காத்து, அழியாப் பேறுபெற்ற சித்தர்கள் வாழ்ந்த நாடு நமது தமிழ் நாடு. முருகன் நோன்பும், வழிபாடும், பிறவும் இன்னும் தமிழ் நாட்டில் நடைபெற்று வருகின்றன. ஆனால் அவைகளின் முறைப்பாடுகள் இந்நாளில் குலைந்துவிட்டன. நோன்பையும் வழிபாட்டையும் ஒழுங்குபட நிகழ்த்தினால், மீண்டும் பழந் தமிழ் நாட்டைக் காணலாம்; சித்தர்களைக் காணலாம் பண்டைநாளில் தமிழ் நாட்டினின்றும் மக்கள் வாழ்வுக்குரிய அன்புத் துறைகள் உலகில் பரவியதுபோல இந்நாளிலும் பரவும். இப்பொழுது உலகிற்கு வேண்டற் பாலன நோன்பும், இயற்கை வழிபாடும். இவைகளை மீண்டும் உலகில் உயிர்ப்பிக்கும் பொறுப்பைத் தமிழ் நாடு ஏற்றுக்கொள்ளல் வேண்டும். ஆதலின், தமிழ் நாட்டில் பிறந்த ஒவ்வோர் ஆண்மகனும் பெண்மகளும் இல்லறமேற்று, முருகனை வழிபட்டு, சான்றோரை ஈன்று, உலகை உய்விக்கக்கடமைப்படல் வேண்டும். 'பிள்ளைகள்' என்று, என்பு தோல்போர்த்த கூடுகளைப் பெறுவதால் என்ன பயன்? பிள்ளைகள் பால் முருகெனும் அழகு ஒழுகல் வேண்டும்.

முருகன் வழிபாட்டிற்கு இல்லறம் இன்றியமையாதது. இல்லறம் என்பது இயற்கையறம். இவ்வறம் இழிவான சிற்றின்ப நிறைவேற்றலுக்கு ஏற்பட்டது என்று நினைப்பது அறியாமை. இல்லறம், இளமை அழகு முதலியவற்றைக் காத்து, மக்கட்பேறு நல்கி, கடவுட்டன்மை எய்துதற்கு இயற்கையில் இயல்பாக அமைந்து கிடக்கும் நல்லறம். இவ்வறத்துக்குரிய பெண்தெய்வத்தைப் பேயாகக் கருதுவது கொடுமை கொடுமை. பெண்ணோடு கூடிவாழ்ந்து, முருகனுக்குரிய நோன்பு வழிபாடுகளை முறைப்படி நிகழ்த்தி, முருகனிடத்து உறுதியை வளர்த்துப் பிணி மூப்புச் சாக்காட்டைத் தொலைக்க முயல்வது அறிவுடைமை.

எம்பெருமான் முருகன், தமிழ் நாட்டவரால் முதல் முதல் காணப்பட்ட இறைவனுயினும், அவன் எல்லா உலகங்களையும் நடாத்தும் ஆண்டவனுயிருக்கிறுன். அவனது நோன்பும் வழிபாடும் எல்லார்க்குமுரியன. அவனை அவ்வந்நாட்டார் அவ்வந் நாட்டு மொழியில் பல பெயரிட்டு வழிபடுகிறுர். அப்பெயர்ப் பொருளை ஆய்ந்து பார்த்தால், அது தமிழில் முருகன் என்னுஞ் சொல்லுக்குரிய பொருளாகவே பெரிதும் முடியும்.

சமரச உணர்வில்லாச் சமயபேத நாட்டமுடையார் முருகனுண்மை காண்டலரிது. முருகனைத் தொழுவோர் 'முருகன் எல்லாச் சமயத்தவர்க்கும் உரிய கடவுள்' என்னும் பொது உணர்வு பெற்றவராயிருத்தல் வேண்டும். 'கடவுளர் பலர், சமயங்கள் பல' என்னும் வேற்றுமை உணர்வு அவர்க்கு இருத்தல் கூடாது. வேற்றுமை உணர்வு உள்ளமட்டும் முருகனை அறிதல் இயலாது. வாதங்களையும் பேதங்களையும் கடந்து நிற்பது முருகனெனுஞ் செம்பொருள். சமயப் போரிடுதல், பொறுமை பகைமை காழ்ப்பு முதலிய பேய்களை வழிபடுவதாகும். இவ்வழிபாடு, அன்புக் கடவுள் உண்மையை விளங்கச் செய்யாது கடவுளுண்மை விளங்கப்பெற்றோர் ஒரு சமய உணர்வு விளங்கப்பெறுவர். இப்பேறுபெற்றவர்க்குச் சமய வாதமும் கடவுள் உண்மையை மறுப்பது போலத் தோன்றும். உலகிலுள்ள பலதிறச் சிறுமைகளில் தலையாயது பல சமய உணர்வுகொண்டு, சமயப்போரிடுவது என்று தெளிக. பன்முகச் சமயநெறி படைத்தவரும் யாங்களே கடவுள் என்றிடும் பாதகத்தவரும் வாத தர்க்கமிடுபடிறரும்' என்றுர் தாயுமான சுவாமிகள். ஆதலால், முருகன் அடியார்க்குச் சமய வாதமாதல் சமய பேதமாதல் இல்லை என்க. முருகன் அருள் பெற்று உண்மை கண்ட அருணகிரியார் சமய வாத பேதங்களை மறுத்து உலகிற்கு உய்யு நெறி காட்டுகிறுர். அவர் தந் திருவருண்மொழிகளுட் சில வருமாறு;—

'சமய பேதத்தவர்க் கணுகொணு மெய்ப்பொருள்'

'கலகலென மிக்க நூல்க—ளதனலே—சிலுகிளதிர் குத்திவாது செய்யுமொரு வர்க்குநீதி, தெரிவரிய சித்தியான—உபதேசம்—தெரிதர விளக்கிஞான தரிசன மளித்து வீறு, திருவடி எனக்கு நேர்வதொருநாளே'



'சமய விரோத சாங்கலை வாரிதியை'

'குவலயங் கற்றுக் கத்தி யிளைக்கும், சமய சங்கத்தைத் தப்பியிருக்கும், குணமடைந் துட்பட்டொக்க இருக்கும்-படிபாராய்'

'தத்வம் பலவையுங் கற்றுத் தர்க்கமதத்வம்-பழியாதே'

'கலைமேவு ஞானப் பிரகாசக்--கடலாடி--ஆசைக்கடலேறி, பலமாய வாதிற் பிறழாதே--மதிஞான வாழ்வைத் தருவாயே' அருணகிரிநாதர் மற்றுமோரிடத்தில், 'கும்பகோணமோடாரூர் சிதம்பரம்' என்னும் திருப்புகழின் இறுதியில் 'உலகெங்கு மேவிய தேவாலயந் தொறு பெருமாளே' என்று திருவாய் மலர்ந் திருக்கிறுர். இச்சமரசமுடையாரே முருகனடியாராவர்.

பழந்தமிழர் கடைப்பிடித்தநெறி உலகிலுள்ள எல்லார்க்கும் உரியது; பொதுவானது, அந்நெறி மீண்டுந் தமிழ் நாட்டில் உயிர் பெறல் வேண்டும். இப்பொழுது ஆன்றுர் அருளிய நூல்களில் அந்நெறி திகழ்கிறதன்றி, மக்கள் வாழ்வில் அஃது ஊடுருவி நிற்கவில்லை உலகிற்குத் தமிழ்நாடு வழிகாட்டுமேல், பழைய பொது நெறியுணர்வை, முதலில் தான் பெறல் வேண்டும். இடையிடையே பலதிறச் சிறுமைக் கொள்கைகளும் பிற இழிவுகளும் தமிழ் நாட்டில் புகுந்து, அதன் இயற்கைப் பொது நெறிக்குக் கேடுவிளைத்தன; விளைக்கின்றன. இளமையும் மணமும் கடவுட்டன்மையும் அழகும் உடையதாய் இயற்கையை உடலாக் கொண்டதாயுள்ள ஒரு பொருள் எவர்க்கு உரியது? எவர்க்கு உரியதாகாது? அஃது எல்லார்க்கும் உரியது. அப்பொருளை உணர்த்தும் இயற்கை வழிபாடும் எல்லாருங் கொள்ளத்தக்கது. தமிழ் மக்கள் கண்ட பொது நெறி இதுவே.

———

சும்மா இருவென நீசொல்லப் பொருளொன்றும்
அம்மா அறிந்திலமென் றன்றுரைத்த எம்மான்
அருண கிரிநாத னநுபவநா யேற்குக்
கருணைபொழி போரூரா காட்டு.

—சிதம்பரசுவாமிகள்

# முத்திவீட்டின் கதவையடைக்கும் சத்துருக்களான ஐம்பொறிகளே முத்தியடைய உதவும் மித்துருக்களுமாவர்.

---

(பீ: எஸ் சுப்பிரமணியம்)

*தானந்த தனன தான தானந்த தனன தான*
*தானந்த தனன தான—தனதான*

ஞானங்கொள் பொறிகள் கூடி வானிந்து கதிரி லாத
நாடண்டி நமசி வாய —வரையேறி
நாவின்ப ரசம தான ஆனந்த அருவி பாய
நாதங்க ளொடுகு லாவி —விளையாடி
ஊனங்க ளுயிர்கள் மோக நானென்ப தறிவி லாம
லோமங்கி யுருவ மாகி —யிருவோரும்
ஓரந்த மருவி ஞான மாவிஞ்சை முதுகி னேறி
லோகங்கள் வலம தாட —அருள்தாராய்!
தேனங்கோ ளிதழி தாகி தாரிந்து சலில வேணி
சீரங்க னெனது தாதை —ஒருமாது
சேர்பஞ்ச வடிவி மோகி யோகங்கொள் மவுன ஜோதி
சேர்பங்கி னமல நாத —னருள்பாலா!
கானங்கள் வரைகள் தீவு ஓதங்கள் பொடிய நீல
காடந்த மயிலி லேறு —முருகோனே!
காமன் கை மலர்கள் நாண வேடம்பெ ணமளி சேர்வை
காணெங்கள் பழநி மேவு —பெருமாளே!
(திருப்புகழ்)

பொழிப்புரை:—தேனைத் தன்னகத்தேயுடைய கொன்றைமலர் ஆத்தி மலர்களினால் தொடுத்த மாலையையும், சந்திரனையுங் கங்கையையும் அணிந்துள்ள சடாமுடியையும், அழகிய திருமேனியை உடையவரும், என் அப்பனும்; ஒப்பற்ற பெண்கள் நாயகமும் அருளின் உறைவிடமான ஐந்து வடிவங்களாக அமர்ந்தவரும், உலக மாயையை உண்டுபண்ணுபவரும், யோக நிஷ்டையடைந்



தோரின் அகக்கண்ணுக்குத் தோன்றும் ஜோதியுமான உமாதேவியார் அமர்ந்திருக்கும் வாம பாகத்தையுடைய நின்மலராகிய இறைவன் உதவி அருளிய பாலனே! காடுகள், வரைகள், தீவுகள் சமுத்திரங்கள் பொடியாகுமாறு, நீல நிறமுடைய மலரின் மீதேறும் ஞான சொரூபியே! மன்மதனது புஷ்ப பாணங்கள் வெட்கமடையுமாறு, குறவர் மகளான வள்ளி நாயகியின் படுக்கையில் சேர்ந்து இருக்கும் நாயகனே! பழநியில் அமர்ந்திருக்கும் பெரியோனே! ஞானமுற்ற பொறிகள் வாய்க்கப்பெற்று, ஆகாயம் சந்திரன், சூரியன் இவைகள் இல்லாத தேசத்தில் போய்ச்சேர்ந்து, பஞ்சாக்ஷரமாகிய மலையின்மீது ஏறி, நாவினால் இனிமையாகப்பாடுவதால் உண்டாகும் சுகத்தின் அறிகுறியான ஆனந்தக்கண்ணீர் ஆறுகப் பெருக, சப்த சுரங்களான இனிய நாதங்களோடு மகிழ்ச்சியுடன் கூடி விளையாடி, சஞ்சலங்கள், மாயை அகங்காரம் முதலியவற்றிலிருந்து நீங்கப்பெற்று, ஓம் என்னும் பிரணவத்தின் ஜோதி சொரூபத்தையடைந்து, நீயும் நானும் ஒப்பற்ற இறுதி நிலையிற் போய்ச் சேர்ந்து, ஞானமென்று சொல்லப்படும் சிறந்த வித்தையின் மீது ஏறிக்கொண்டு, லோகங்களை யெல்லாம் வலமாகச்சுற்றி ஆடிவரும் வண்ணம் அருள் புரியவேண்டும்.

## விருத்தி உரை.

ஆதியில் உருவம் குணம் செயல் இவையொன்றுமில்லாமல் நிர்மலராய் எங்கும் நிறைந்து நின்ற சிவபெருமான் கருணை மிகுதியினால் ஜீவகோடிகளின் பந்தங்களை யொழிக்கவேண்டுமென நினைத்து இயற்கைச் சக்திகளாகிய பிருதிவி அப்பு தேயு வாயு ஆகாசம் என்னும் பஞ்ச பூதங்களினால் பஞ்சலிங்கங்கள் உண்டாக்கி அவைகளில் தாம் பிரசன்னராய் நின்றார். அவ்வுருவங்களனைத்தும் எம்பெருமானது அருளின் உருவங்களாகும். உமாதேவியாரே எம்பெருமானது திருவருளின் சொரூபம். ஆகையினால் இப்பாடலில் "சேர் பஞ்சவடிவி" என்பதற்குச் சிவபெருமானது கருணை பொருந்தியிருக்கும் பிருதிவிலிங்கம், அப்புலிங்கம், தேயுலிங்கம், வாயுலிங்கம், ஆகாசலிங்கம் என்னும் உருவங்கள் எவருடைய திருவுருவங்களோ அந்த உமாதேவியார் என்பது பொருள். மற்றும் சுழுமுனை [illegible]யினூடே அனேக காந்திகளுடனே பாம்பின் வடிவாயிருந்து உடலை வளைத்து மூலாதாரத்தின் மேலே படத்தை வைத்துக்கொண்டு யோகநித்திரை செய்வதும், யோக நிஷ்டையிலமர்

ந்து மோன நிலையை யடைந்தவர் தமதூடே காண்பதுவுமான ஜோதிமயமான சுத்தமாயை யெனப்படும் குண்டலினி சக்தி சிவ சக்தியாம் உமாதேவியாரே என்பதை "யோகங் கொள் மவுன ஜோதி" என்று கூறிச் சுவாமிகள் உணர்த்தியருளியிருக்கிறார், வெட்டவெளியில் எண்ணிறந்த சராசரங்களை மாயமாய்த்தோன்றச் செய்தது பரம மாயையான உமாதேவியாரே யாதலின், அவரை "மோகி" என்று கூறப்பட்டிருக்கிறது.

மெய்வாய் கண் மூக்கு செவி இவைகள் ஒருவருக்கு முக்தி வீட்டின் கதவை அடைக்கும் சத்துருக்களாகவும் எளிதில் முக்தி யடைய உதவி-செய்யும் மித்துருக்களாகவும் இருக்கும். அவை விஷய சுகங்களை யனுபவிக்க நாடாமல் எம்பெருமானை வணங்கவும் துதிக்கவும் தரிசிக்கவும் முகரவும் அவரது புகழைக்கேட்கவும் நாடி அவ்வாறு செய்வதனால் உண்டாகும் சுகங்களை அடையும் முக்தி நெறியில் மனத்தை நிறுத்துமேயாகில், அவைகளே ஒருவருக்கு முக்தியைக் கூட்டுவிக்கும் பரம மித்துருக்களாகும். அப்படிச் செய்வதற்குரிய ஞானமுற்ற ஐம்பொறிகள் வாய்க்கப்பெற்ற ஒருவர் சந்திர சூரியர்கள் ஒளிவீசப் பெறாததும் நிராகாசமானதும், சத்தின் சொரூபமானதுமான ஜோதிமயமான வெட்டவெளியை யடைவார். அங்கு போய்ச்சேர்ந்த பின்னர் அவர் அவ்வெளியின் காரணரும் பஞ்சாக்ஷரத்தின் நாயகருமான சிவபெருமானது ஒப்புயர்வற்ற பெருமையை அறிவார். அதன் பின் அவர் அப்பெருமானது பெருமையை நாவினால் பாடி அதனால் தாம் இன்பமுற்றதற்கு அறிகுறியாகக் கண்களினின்றும் ஆனந்தக் கண்ணீர் ஆறாய்ப் பெருகப் பெற்று, எம்பெருமானது புகழைச் சப்தசுரங்களுடன் கலந்து இன்னிசையாகபாடி மகிழ்வார். எம்பெருமானது புகழைப் பாடுவதில் மனம் இலயிக்கப்பெற்றால் ஜடதேகத்தினால் உண்டாகும் சஞ்சலங்களும், துன்பத்தை இன்பமாகவும் சிற்றின்பத்தைப் பேரின்பமாகவும் பொய்வாழ்க்கையை மெய்யாகவும் கருதச்செய்யும் ஜகமாயையும், நான் என்று மார்தட்டுவதும் எனதுடைமை எனதடிமையென்று கூறுவதுமான அகங்காரமும் அடியோடழிந்து போகும். பிறகு அவர் ஓங்காரத்துக்குள்ளே தோன்றும் ஜோதி உருவத்தைப் பெற்று, ஓங்காரத்துள் ஒளியாக விளங்கும் முருகப் பெருமானுடன் இரண்டறக் கலந்து, வேதத்தில் ஜீவர்கள் இறுதியில் அடையவேண்டிய சிறந்த நிலைமை யாதென்று கூறப்பட்டு



ள்ளதோ அந்த நிலைமையான—பரம்பொருளுடன் இரண்டறக் கலக்கும் நிலைமையை அடைவர். அவ்வாறு பரம்பொருளுடன் கலந்து அதன்தன்மையை அறிந்து கொண்ட பெரியார் பரம மாயையின் தன்மையை அறிந்துகொள்வாராதலின், சகல லோகங்களிலும்நிறைந்துநிற்பதுஒரே பொருளென்பதையுணர்ந்து களித்துத்திரிவர். அப்படிப்பட்ட மேலான நிலைமையைத் தமக்குத் தந்தருளும்படிசுவாமிகள் ஞானசொரூபியும்பரம் பொருளுமான முருகப் பெருமானைப் பிரார்த்திக்கிறார்.

"ஒளியில் விளைந்த வுயர்ஞான பூதரத் துச்சியின்மே
லளியில் விளைந்ததோ ரானந்தத் தேனை யநாதியிலே
வெளியில் விளைந்தவெறும் பாழைப் பெற்ற வெறுந்தனியைத்
தெளிய விளம்பிய வாமுக மாறுடைத்தேசிகனே!"

"ஆங்கா ரமுமடங் கார்பர மானந்தத்தே
தேங்கார் நினைப்பு மறப்பு மறார்தினைப்போதளவு
மோங்காரத் துள்ளொளிக் குள்ளே முருகனுருவங்கண்டு
தூங்கார் தொழும்புசெய்யாரென் செய்வார்யம தூதருக்கே!"

என்னும் கந்தரலங்காரப் பாடல்களும்.

"இணையடிகள் பரவுமுன தடியவர்கள் பெறுவதும்
ஏசிடர்களோ பாச நாசனே
இருவினைமு மலமுமற இறவியோடு பிறவியற
ஏக போகமாய் நீயு நானுமாய்
இறுகும் வகை பரம சுக மதனையருளிடைமருதில்
ஏக நாயகா லோக நாயகா—இமையவர் பெருமாளே!"

என்னும் திருவிடைமருதூர்ப் பாடலின் இறுதி அடியும் இப்பாடலை விளக்கும். [இப்பாடலில் "நாவின்பரசமதான × × × விளையாடி" என்றுவரும் மொழித்தொடருக்கு யோக மார்க்கத்தை யொட்டியும் பொருள் கூறலாம். அப்படிப்பட்ட பொருள் பின் வருமாறு;—

"நாவுக்கு இன்பத்தைத் தருவதும் ஆநந்தத்தை விளைவிப்பதுமான அமுதமானது ஆறு போல் பெருகிப் பாயப்பெற்று, தேகத்தினுள்ளே சகல விதமான நாதங்களும் ஒலிப்பதைக் கேட்டு மகிழ்ச்சியடைந்து," ஏனைய அடிகளுக்குக் கூறியுள்ள உரை யோகமார்க்கம் ஞானமார்க்கம்என்றும்இரண்டு மார்க்கங்களுக்கும் பொருந்தும்.

---

# கற்றோரது கல்வியில் அவர் மதிக்கும்படி பேசுதல்.

(சிவத்தியானந்த மஹர்ஷி)

கரவாகிய கல்வி யுளார் கடைசென்(று)
இரவா வகை மெய்ப்பொரு ளீகுவையோ
குரவா குமரா குலிசாயுத குஞ்
சரவா சிவயோக தயா பரனே,

(கந்தர் அநுபூதி.)

### அந்வயம்

குரவா! குமரா! குலிசாயுத குஞ்சரவா! சிவயோக தயா பரனே! கரவு ஆகிய கல்வி உ(ள்)ளோர் கடைசென்று இரவாவகை மெய்ப்பொருள் ஈகுவையோ? (நான் அதனால் கல்வியுளாரோடு பேசும் வன்மை பெற்றவனாவேனா? என்றபடி)

### பொழிப்புரை

தலைப்பு:— [கல்விச் செருக்குள்ளவர்களுக்குத் தெய்வவருளால் ஞானம் பெற்றவர்களைக் காணின் ஒருவித இகழ்ச்சி ஏற்படுவதுண்டு. அஃதேனெனில், அருள் பெற்றுப் பாடுவோர் இலக்கணவமைதியில்லாதவரென்றும், கல்வியினிடத்துத்தம்மைப்போல் உழையாதவர் என்றும் அவர்கள்எண்ணுவதேயாகும். உண்மையில் சுவாநுபவமும் அருள் வரமும் இல்லாதவர் கடபட வாதிகளாகமட்டும் இருப்பரேயன்றி முற்றும் உணர்ந்தவர்களாக இரார். அருள் பெற்றவர் இக்கடபடவாதிகள் நீண்டகாலம் உழைத்துப் படித்த கல்வியையெல்லாம் ஒரே திருஷ்டியில் தமது மனத்தின் கண் அமைத்து அதனைப்பலரும் வியக்குமாறு கையாளும் ஆற்றலைப் படைத்தவர்களென்பதை இவ்வேட்டுக்கல்வியாளர் உணர்வதில்லை. அதனால் அருளாளர் தமது அருள்யாசகத்தை இறைவனிடத்துச் செய்து பெறும் போதே உலகக்கல்வியையும் பெற்றுவிடுகிறார்கள் என்பதறியவும். இவ்வித அருளைப்பெற்றோரிடத்து உலகக்கல்வியாளரது பிதற்றுக்கள் நீடித்து நிலை நிற்பதில்லை. இவ்வுண்மையை யறிந்து, உபாஸகன் இப்பிதற்றாளர்களது தலைவாயிலில் நில்லாது தனது உபாஸனா மூர்த்தியினிடத்திலேயே அக்கல்வியையும் பெறுமாறு தூண்டும் மறை இது.]



கற்றோரது கல்வியில் அவர் மதிக்கும்படி பேச.

செய்யுள்:—குருநாதனே! நித்தியயௌவனம் வாய்ந்தவனே! வச்சிராயுதனாலளிக்கப்பட்ட குஞ்சரமாகிய தெய்வானை மணாளனே! சிவயோகத்தைப் பக்தர்களுக்குத் தரும் தயை நிறைந்தவனே! (தங்களது அறியாமையை வெளிக்காட்ட அஞ்சியோ, தாங்கள் கல்வியினால் பெறும் உலகப்பயன்களைப்பிறரும் அடைய ஏற்படின் தங்களது பெருமை குறையுமென எண்ணியோ, தம்மை வந்து அடுத்து நின்று கேட்பவர்களுக்குக் கொடாமல்) வஞ்சனையாகத் தங்களுக்குள்ளேயே வைத்துக் கொண்டிருப்பதாக வேஷங்காட்டும் கல்வியாளரிடத்துச் சென்று ஞானத்தை யாசிக்காமல், ஸர்வக்ஞனாகிய நீயே என்முன் தோன்றி உண்மைப்பொருளை எனக்குக் கொடுப்பாயோ? (யான் அதன் பலத்தினால் கல்வியாளர்களோடு வார்த்தையாடி அவர்களது நன்குமதிப்பைப் பெறுவேனோ நீ சொல்வாயாக என்றபடி.)

### விசேடக்குறிப்புகள்.

குமரகுருபர தேசிகர் தமக்கு இலக்கணப்பயில்வு முண்டு என்பதைக்காட்டச் 'சிதம்பரச்செய்யுட்கோவை' பாடியது உலகமறிந்ததே. இவ்வருணகிரிநாதரே கந்தரந்தாதி பாடி வில்லிபுத்தூரரைத் தோற்கடித்ததை அவர் சரிதம் கூறும். இவரே முன்னமும் 'யாமோதிய கல்வியும் எம்மறிவும் தாமே பெறவேலவர் தந்ததனால்' எனக் கூறியுள்ளார். அத்தகைய துணிவுடன் கூறியுள்ளவர் இச்செய்யுளையும் பாடியிருத்தல் கூடுமோவென்பது ஐயுறத்தகுந்தது. 'குலிசாயுதகுஞ்சரவா' என்பதனை 'குலிசாயுத' 'குஞ்சரவா' என இரண்டு விளியாகப் பிரித்து வச்சிராயுதத்தையுடையவனே! பிணிமுகம் என்னும் யானையை யூர்பவனே! என்று பொருள் கூறுவதிற் பயனொன்றுமில்லை. ஆனால், ஒருகாலத்து உனது அறிவின் ஆற்றலைக்கண்ட தேவர் கோமானும் உனக்குத் தோட்டுணையாகத் தான் வளர்த்த தேவ குஞ்சரி யென்னும் சத்தியைப் புணர்த்தானாதலின், அத்தகைய பெருஞானம் வாய்ந்த உன்னையானடுத்து எனது ஞானத்தைப் பெறவேண்டுமேயன்றி, என்போலவே முக்குண வயத்தராய்க்காமக்குரோதாதிகளுள்ளவர்களும்,

"கல்வியுடைமை பொருளுடைமை யென்றிரண்டு
செல்வமும் செல்வமெனப்படும்—இல்லார்
குறையிரந்து தம்முன் நிற்பபோற்றாமும்
தலைவணங்கித் தாழப்பெறின்"

என்பதை அறியாதவருமான மூர்க்கர்களிடத்து, 'நாய் பெற்ற தெங்கம் பழம்' போலவுள்ள கல்வியைக்கேட்டு இரந்து நிற்பேனோ என்று பொருள்பட 'குலிசாயுத குஞ்சரவா' எனக்கூறினாரென்பது எவ்வளவு சிறப்புடைத்தென்பதை யோசிக்கவும். அதுபோலவே, 'துருத்தியெனும்படி' என்றற்றொடக்கத்துக் கந்தரலங்காரச் செய்யுளில் 'சிவயோகமெனும் குருத்தையறிந்து முகமாறுடைக்குருநாதன் சொன்ன கருத்தை மனத்திலிருந்துங் கண்டீர்' என்றபடி, இக்குருநாதன் சிவயோகத்தை யருளுந்தயாபரனென்று கூறுவது சிறப்புடைத்தேயன்றிச் சிவயோக, தயாபர என இரண்டுதனிப் பட்ட விளிகளாகக் கூறிப்பொருள் உரைப்பதில் பயனில்லையென்க. இம்மெய்ப்பொருளே, உலகவர் கற்ற கல்வியை யெல்லாம் நன்றாக்கிப் பின்னர் அவ்வொன்று பட்ட கல்வியை ஒரு நல்லாற்றிற் செலுத்த வல்லதானது பற்றி 'மெய்ப்பொருளீகுவையோ' என்றார்.

இம்மெய்ப்பொருளொன்றைப் பெற்ற அக்கணமே உலக கல்விமுற்றிலும் அதற்குள் அடங்கி விடுவதை உய்த்துணர்ந்தறிக. ஒருவன் பல வருஷங்களாகக் கற்றுப் பெற்ற வித்தையை இவ்வுண்மை ஞானமுள்ளவன் அவனிடத்துச்சில நிமிஷங்கள் சம்பாஷிப்பதனால் அறிந்துகொண்டு அவ்வித்தையைத் தன்னதாக்கிக் கொண்டு விடமுடியு மென்பதைச் சூசிப்பித்தே, 'கல்வியில் சம்பாஷிக்க' என்ற தலைப்புக்கொடுத்தார். இவ்வகை மேதாவிகளைக் கண்டு அழுக்காறடையும் சிறுகுணமுள்ளவர்களையே 'கரவாகிய கல்வியுளார்' எனறார். அச்சிறுகுணமுள்ளவர்களிடத்துப் பயில்வதற்கு ஒன்றுமில்லையென்பதைத்தோற்றுவிக்கவும், 'மெய்ப்பொருள்' என்ற சொற்றொடர் உபயோகிக்கப்பட்டது.

### 'இடு காடு' வயிறன்று

'சுதந்தர ஜீவன்'

தன்னுயிர்போல் மன்னுயிரில் அனபு காட்டுந்
தவத்தைவிட மாதவங்கள் வேறுமுண்டோ
தின்னுகின்றாய் பிறவுயிரை வதைத்துக் கொன்று
ஜீவகாருண்ணியமும் செப்புகின்றாய்
இன்னுமேன் உன்னிடத்தில் இரக்கமில்லை
'இடுகாடு' வயிறென்றோ எண்ணுகின்றாய்
சன்னதங்கொண் டுயிர்ப்பலி இறைக்கிடாதே
தன்னலத்தைப் பலியிட்டா லுயர்வாழ்வாமே.

# குரு

(சாது ஸ்ரீ முருகதாஸ்)

அன்பு, தெய்வம், அல்லா, கர்த்தா, சக்தி, ஆத்மா, இயற்கை மற்றும் எப்படிப் பெயரிட்டு வழிபட்டாலும் அப்படி எல்லாம் வந்து அவரவர் வேண்டியதை நிலை அறிந்து அருள் தரும் வடிவம் எதுஆனாலும் அவையனைத்தும் குருவடிவங்களேயாம். உரு, அரு, உருஅரு, இல்லை, உள்ளது என்று சொல்லி வழிபடும் தன்மைகளெல்லாம் ஓர் உயர் நிலையில் அக்ஞானமெனவே ஓதுக்கும் படியாகும்.

இவ்வதீதமான ஸ்வரூப லக்ஷண ஞானங்களையும் கடத்தி ஆத்ம ஜோதியில் நம்மை நாமுணர்ந்து உணர்ச்சி, உணரப்படுவது, உணர்பவன் ஆகியவற்றையும் தாண்டச்செய்து எல்லாம் கடந்த சொல், அல், பகல், வெளி, உள்; வரவு, போக்கு, ஆகிய எல்லாம் இறந்த சுத்த தத்துவமாக நம்மை ஆக்கு. ஆளக்கருணைகொண்ட பூரணம் கொள்ளும் முதல் சகுண வடிவங்களே தெய்வம் என்று கொண்டாடப்படுகிறது. 'உருவெல்லாம் குரு. அற்றவை பெற்ற நிலைபிரம்மம்" என்ற நிலையில் எல்லாம் குருவடிவமேயாம். இவ்வடிவம் உலகையும் மக்களையும் உய்விக்கவேண்டியே வந்தது என்பதை

"அருவமும் உருவமாகி அனாதியாய் பலவாய் ஒன்றாய்
பிரும்மமாய் நின்ற ஜோதிப் பிழம்பதோர் மேனியாகிக்
கருணைகூர் முகங்களாறும் கரங்கள் பன்னிரண்டும் கொண்டே
ஒரு திரு முருகன் வந்தாங் குதித்தனன் உலகம் உய்ய."

என்று கந்தப்புராணப்பாடல் சொல்லுகின்றது. அறிந்தோ அறியாமலோ எப்படியோ செய்து சேர்க்கப்பட்ட வினையால் வந்த தேகத்தை அஞ்ஞான இருளில் கொடிய குணங்களால் ஆனபாபக் குழியில் தள்ளி வீணுக்கு அழித்து இன்பத்திற்குப்பதில் கலப்பற்ற துன்பத்தையே அனுபவிக்கும் கொடுமையை நீக்கவல்லது என்ற கருத்துடன் கூடிய சொல்லே குரு என்பது.

"திருவடியுந் தண்டையுஞ் சிலம்பும் சிலம்பூடுருவப்
பொருவடிவேலுங் கடம்பும் தடம்புயமாறிரண்டும்
மருவடிவான வதனங்களாறும் மலர்க்கண்களும்
குருவடிவாய் வந்து என் உள்ளங்குளிரக் குதிகொண்டவே"

என்று முருகனைப் பாடப்புகுந்த அருணகிரி குருவடிவு என்கிறார். இன்பம் அனைவர்க்கும் வேண்டின் எல்லாம் குருவடிவாகக்காணக் கற்கவேண்டும். படிப்புக்களாலோ, வாதத்தாலோ, அனுபவத்தாலோ, ஆர்ப்பாட்ட ஜாதிகர்மாக்களாலோ, காணமுடியாத ஒப்பற்ற தன்மய தத்துவத்தை குருநாதர் தன் அபார கருணையால் இமைக்கும் நேரத்தில் அடையும்படி செய்து விடுவார்.

"அறிவும் அறிதத்துவமும் அபரிமித வித்தைகளும்
அறி என இமைப்பொழுதில் வாழ்வித்த வேதியன்"

என்ற வாக்கால் பாடி அக்ஞானத்தால் எதிரில் நிற்கும் சற்குருவையும் அவரால் சொல்லிக்காட்டப்படும் தத்துவத்தையும் உணராது சிற்றறிவின் மூலம் ஏமாறாது மெய்ஞ்ஞானம் பெற்று தம்மைத் தடுத்தாள பூரணனே தெய்வங்களான குருவடிவும் ஞானிகளான உலகதேகதாரியான குருவடிவங்களும் என்று அவன் அருள் பெற்றுக் காணவேண்டும். அவன் யார் யார் எதை மறுத்தாலும், வெறுத்தாலும், விரும்பினாலும் எப்படிப்பேசினாலும் அவற்றுள் எல்லாம் அவர்கள் பேசுவதற்குத் தக்கவாறு நின்று ஆடல் செய்யும் தன்மையும் அருள் தரும் தன்மையும் அறியலாம். "நான்" "நான்" என்று பேசவைத்து கடைசியில் தேகாபிமானாதிகளைப் பிரித்து அவன் பேசிவந்த "தானி" லேயே தன்னை அவனுக்குக் காட்டவல்ல ஞானசக்திதரனை குருவும் மற்ற வடிவங்களான உலக உயர்வு தாழ்வுகளும் நீங்கி இன்புறலாம்.

தொடரும்.

---

**அப்பர் அருள்வாக்குகள்**

திருவடிச்சிறப்பு

கடவுளுடைய திருவடிகள், யாதொருபற்றுமில்லாதவர்கட்குச் சிறந்த துணையாயிருப்பன; அருள் நூல்களைக்கற்று ஓதி உணர்ந்தார் பரவும் பெருமையுடையன.

உற்றாரிலார்க்கு உறுதுணையாவன ஓதிநன்னூல்
கற்றார் பரவப் பெருமையுடையன. 93-3.

---

# அவதார புருஷர்களது மனைவிகள் சம்சாரக்கடல் தாண்டுவிக்கும் நாவாய்கள்.

—:—;—:—

(ஸ்ரீமதி சுந்தரம்மாள் ராகவாச்சாரி)

மனிதர்களை நல்வழிப்படுத்தி, ஆத்மசொரூபத்தை விளக்கிக் காட்டி, இல்லறத்துறையினின்றும் நெறிதவறாது நற்கதியடையச் செய்யும் பொருட்டே பகவான் மனிதரூபமெடுத்து மனிதர்களே போன்று இல்லற வாழ்க்கை நடத்திக்காட்டியுள்ளார் என்பதை நமது சகோதரிகள் அறிவார்கள். இப்படி அவதாரங்களெடுத்த சமயங்களில், தேவி பராசக்தியே, அவர்களுக்கு வாழ்க்கைத்துணைவிகளாக அமைந்து, தாம்பத்திய தர்மத்தையும் பேரின்பமடைவதற்கான வழிகளையும் கைப்பிடித்து மனிதர்களுக்கு விளக்கிக் காட்டியுள்ளனர். ஆகவே அந்த ஸ்திரீவியக்திகளே, அவதார புருஷர்களது துஷ்டநிக்ரக சிஷ்டபரிபாலனக் கருமங்களுக்குத்தேவையான பேருதவிபுரிந்துள்ளனர். அவர்களது ஒத்துழைப்பும் விசேஷபக்தியும், நமது சகோதரிகளுக்குப் புத்திபுகட்டி நல்வழியில் நடக்கும்படி செய்யவல்ல தூண்டுகோல்களாகும்.

இராமவதாரத்தை எடுத்துக்கொள்வோம்:- சீதாப்பிராட்டி பூதேவியின் அம்சம். ஜனகமகாராஜனால் வளர்க்கப்பட்டவள், வீர்யத்தைப் பணயமாய்வைத்த அவரது பிரதிக்ஞையை நிறைவேற்றிய உத்தம புருஷன் இராமனுக்குரியவளானாள், இப்பூமாதேவியின் புதல்வியை இராமபிரானுக்குத் தாரைவார்த்துக் கொடுப்பதற்காகக் கலியாண மண்டபத்துக்கு ஸர்வாலங்கார பூஜிதையாய் அழைத்துவந்தனர். தேவியின் அழகை கம்பநாடர் வருணிப்பதை என்னென்றுரைப்பேன்!

"வல்லியையுயிர்த்தநிலமங்கையிவள்பாதம்
மெல்லியவுறைக்குமென அஞ்சிவெளியெங்கும்
பல்லவமலர்த்தொகைபரப்பினளெனத்தன்
நல்லணிமணிச்சுடர்தவழ்ந்திடநடந்தாள்"

ஜனகர் ஸீதாதேவியை அக்கினிக்குமுன் நிறுத்தி ஸ்ரீ ராமபிரானைப்பார்த்து "இதோ இந்த ஸீதை, என்பெண்; இவளை உனக்கு

வாழ்க்கைத்துணையாகத் தருகிறேன். இவளைப் பெற்றுக்கொள் உனக்கு சர்வமங்களமும் உண்டாகும், கணவனை ஆராதிப்பதே தன் விரதமாகக்கொண்ட பாக்கியவதியாய் சீதை பிரகாசிப்பாள். உன் நிழல்போலவே உன்னைவிட்டு ஒருநிமிஷமும் பிரியமாட்டாள்" என்று சொல்லி வேதமந்திரங்களுடன் பிராட்டியை இராமனிடம் தாரைவார்த்துத் தந்தார். ஸ்ரீ இராமபிரானும் அக்கினி சாக்ஷியாக "என்மனதிற்குள் உன் மனசு நிலைத்துநிற்கட்டும். என்சித்தத்தின்படியே உனது சித்தமும் ஒத்துழைக்கட்டும். நான் பிறழமாட்டேன்; நீயும் பிறழாமலிருக்கக்கடவாய். என்னைப்பின்பற்றிநடந்து என்னுடன் வாழ்க்கையில் ஈடுபடுவாயாக, இந்த வார்த்தைகளை ஒரேமனதுடன் ஏற்றுக்கொள்" என்று பிரமாணம்செய்தார், இவையனைத்தும் வால்மீகி இராமாயணத்திலும், கம்பர் இராமாயணத்திலும் வெகு தெளிவாகக் கூறப்பட்டுள்ளன, பார்வதிதேவி தன்விவாகத்தை யுத்தேசித்துத் தவம்செய்தபோது சங்கரபரமாத்மா பிரத்தியக்ஷமாகி அவ்வம்மையாரது பாணிக்ரஹணத்தை நாடினார்-பர்வதராஜனாகிய தனது தகப்பனது அனுமதியைப் பெற்றுவரும்படி உமாதேவி கட்டளையிட, சிவபிரான் ஸப்தரிஷிகள் அருந்ததிதேவி இவர்களது உதவிகொண்டு பர்வதராஜனது சம்மதத்தைப்பெற்றுப் பார்வதி தேவியை மணந்துகொண்டபொழுதும், தம்முடன் இணைபிரியாது தங்கி உலகத்தோரை உஜ்ஜீவிப்பதில் ஈடுபடும்படி வேண்டிக்கொண்டனராம். இன்னும் மகாவிஷ்ணுவும் இலக்குமியைத் தன் மார்பிலேயே (இருதயத்திலேயே) தாங்கி பக்தர்கட்குப் பதவியளிப்பதாக ஐதிகமல்லவா? கஜேந்திரனுக்குக் காட்சிதந்து முதலைவாயினின்றும் விடுவித்து முக்தியளித்ததற்கும் லக்ஷ்மிதேவியின் தூண்டுதலே பிரதானமாயிருந்ததல்லவா?

அன்பையே அடிப்படையாகக்கொண்ட கூட மத சம்பிரதாயங்களிலும் ஸ்திரீவியக்தியையே தெய்வமாகப் பாராட்டிக் கொண்டாடுகிறார்கள். கிறிஸ்தவர்கள் 'வர்ஜின் மேரி'யையும் இந்தியர்களுள் பலர் காளிகாதேவியையும், எகிப்தியர் ஐஸிஸ் என்னும் பெண் தேவதையையும், கிரேக்கர்கள் பால்லாஸ் அதீனி என்ற தேவதையையும் விசேஷமாக பூஜிக்கிறார்கள். அத்தேவதைகளின் அருளால் முத்தியடையலாம் என்பது அவர்களது துணிபு. துஷ்டர்களைக் கொல்வதற்கும் முக்கியமாக இராவணவதத்திற்காகவும் ஸ்ரீ இராமபிரான் அவதரித்ததாக நாம் சாதாரணமா



கக் கதையில் கேட்டும் படித்துமிருக்கிறோம். தெய்வாம்சமென்று நாம் பாராட்டிவரும் ஸ்ரீ தியாகராஜஸ்வாமிகள் சிறந்த ராமபக்தர் காம்போதி ராகத்தில் "மாஜானகி" என்று தொடங்கும் ஓர் அபூர்வ கீர்த்தனை அவரது பலவரிய கீர்த்தனங்களுள் சிறந்தது. தெலுங்கிலேதான் அவரது சங்கீத சாகித்யங்கள் செய்யப்பட்டுள்ளன. வால்மீகி ராமாயணத்தை வெகு நன்றாய்ப் படித்து அறிந்த பெரியார் இத்தியாகப்பிரம்மம். "மாஜானகி" என்று தொடங்கும் கீர்த்தனையில் அமைத்துள்ள தத்துவார்த்தம் என்னவெனில் "ஜானகியை நீ மனைவியாக அடைந்ததனாலே, ஸ்ரீ ராமா நீ ஒப்பிலா சக்கரவர்த்தியானாய். இராவணனை கொன்றதனால் ஏற்பட்ட பெரும் புகழ் சீதாப்பிராட்டியாகிய ஜானகியை மணந்துகொண்டதாலேதான். உன்னோடு காட்டுக்குச் சந்தோஷமாகவந்து தனது நிழலையேபோன்று இராவணவதத்தைக்கோரிய உனது மனோரதத்தை நிறைவேற்ற அவ்விராக்கதனோடுசென்று, அசோக மரத்தடியில் சோகத்துடன் காலங்கழித்து,தனது பதிவிரதாதர்மத்தின் பலத்தினால் அவ்வரக்கனை கடும் பார்வை பார்த்துக் கொல்லக்கூடிய திறமையிருந்தும், தனது அளவற்ற அன்பிற்குரிய சகாவான ஸ்ரீ ராமபிரானுக்கே அவ்வரக்கனை கொன்ற பிரதாபமும் பெருமையும் சேரவேண்டுமென்ற ஒரு பேரவாக்கொண்ட ஜானகியின் மணவாளா" என்று பாடுவதிலிருந்து ஸ்திரி புருஷ தர்மத்தின் ஐக்கியமும், பெருமையும் வெளியாகிறது.

இராவணனும் பூர்வஜென்மத்தில் பெற்றவோர் சாபத்தின் விமோசனம், சீதாப்பிராட்டியைத் தூக்கிச்செல்வதனால் இராமபிரானுக்குக் கோபமூட்டுவதும் அப்பரமபுருஷன்கையினால் மரணமடைந்துதனது ஆத்மஜோதியை இராமரது கையம்பினால் வெளிப்படுத்திக்கொண்டு பேரின்பமடைவதும் என்பதே. இதற்குச் சாதனமாயிருந்து பற்பல துன்பங்களையும் பாராட்டாது உதவிபுரிந்தது ஜானகியல்லவா? சம்சாரக்கடலைத்தாண்டி (முத்திநிலையை அடைய)ப் போவதற்கும் சிறந்த மரக்கலமாயிருந்ததும் சீதாப்பிராட்டிதானே!

# — சாதனவாரம். —

——:-:——

**(13-4-49—18-4-49)**

இலங்கையில் சாதனவாரம் முதன்முதலாகத் திருக்கேதீஸ்வரத்தில் விரோதிவருட முதல்நாள் (13-4-49) புதன்கிழமை கஞ்சன்காடு ஸ்ரீ சுவாமி இராமதாசரின் பிறந்ததினத்துடன் ஆரம்பமாயது. இதை நடத்துவதற்குத் தென்னிந்தியாவிலிருந்து சாது ஸ்ரீ முருகதாஸ், பாலசுவாமி இராமதாஸ், சுகப்பிரமம் ஆகிய மூவரும் 12-4-49 செவ்வாய் இரவே கேதீஸ்வரம் வந்து சேர்ந்தனர். வருடப்பிறப்பன்று கேதீஸ்வரநாதனுக்கு விசேஷ அபிஷேக ஆராதனை நடைபெற்றது. அத்தருணம் ஐஞ்ஞூற்றுக்கதிகமான அன்பர்கள் பங்குபற்றினர்.

சாதனவாரம் நடைபெற்ற ஆறுநாட்களும் கிரமமாக காலை நாலுமணிக்கு திருப்பள்ளியெழுச்சியுடன் அன்பர் துயிலெழுந்தனர். 4—5 மணிவரை காலைக்கடன்கள் 5—6 மணிவரை யோகாசனப்பயிற்சி. 6—7 மணிவரை பாலாவியில் ஸ்னனம். 7—8 மணிவரை பஜனை. 8—9 மணிவரை காலை ஆகாரம். 9—11-30 மணிவரை புராணபடனம், சமயபாடம், சம்பாஷணைகள். 11-30 பி. ப. 3 மணிவரை மத்தியானப்போசனம் இளைப்பாறுதல். மாலை 3—5-30 மணிவரை உபந்நியாசம் மாலை 5-30—6-30 மணிவரை மாலைக்கடன்கள். மாலை 6-30—8-30 மணிவரை பஜனை. மாலை 8-30—9-30 மணிவரை இராப்போசனம். மாலை 9-30—10 மணிவரை ஆத்மார்த்திக சம்பாஷணைகள். இரவு 10—காலை 3 மணிவரை நித்திரை.

பிரசங்கசாகரர் சுகப்பிரமம் தாய்மையின் தத்துவத்தைக் காரைக்காலம்மையார் சரித்திரமூலமும் சிவாபராதத்திற்குத் தந்தையாயினும் தண்டிக்கப்பட வேண்டியவனே என்னும் உண்மைத் தத்துவத்தைச் சண்டேசுர நாயனர் சரித்திரமூலமும் அன்பின் தத்துவத்தைக் கண்ணப்பநாயனர் சரித்திரமூலமும் விளக்கி விரிவுரை செய்தார்கள்.

பாலசுவாமி இராமதாஸ் அவர்கள் சண்டேசுர நாயனர் சரித்தை அத்திவாரமாக வைத்துக்கொண்டு கோயிலின் தத்துவங்



திருக்கேதீஸ்வரத்தில் சென்றமாசம் நடந்த சாதனவாரத்தில் பங்குபெறுவதற்கு இந்தியாவிலிருந்து வந்த பெரியார்கள்.

(1) சுகப்பிரமம் S. இராமசாமி சாஸ்திரிகள் (2) சாது ஸ்ரீ முருகதாஸர் (3) பாலயோகி ஸ்ரீ இராமதாஸர்

கள் என்பதுபற்றியும் கஞ்சன்காட்டுக்கு அருகேயுள்ள ராமநகரம் ஆனந்தாஸ்ரமத்தில் குருமூர்த்தம் கொண்டிருக்கும் சுவாமி ஸ்ரீராமதாசர், தெலுங்குநாட்டில் விசேஷமாகப் பிரசித்தி பெற்றிருக்கும் பெரியாராகிய பத்ராசலம் ராமதாசர் ஆதிய இருவர்களது, சரிதைகள்கொண்டு ராமநாமமகிமை என்பது பற்றியும், இராமலிங்க சுவாமிகளின் சரிதையைக்கொண்டு சமரசம் என்பது பற்றியும் இன்னும் தாய்மார்களின் யோகசாதனை, எல்லாருங் கைக்கொள்ள வேண்டிய பிரார்த்தனை, ஜெபம் தியானம் என்பனபற்றியும் விளக்கி விரிவுரை செய்தார்கள்.

"இனிய காட்சி யினிய நினைவுகள்
இனிய பேச்சுடன் இன்னிய நற்செயல்
தனிய கந்தை தவிர்ந்த சமரஸம்
புனித வாழ்க்கை பொருந்திய" வாரமே (சுத்தானந்தர்).

---

## சாதன

### வாரத்தின்போது அதில் கலந்துகொண்ட அன்பர்கள் செய்துகொண்ட சங்கற்பங்கள்

1 தாய்மைபாக உலகைக்காண பெரியார்களுடைய ஆசியாலும் கடவுளருளாலும் மனத்தைத் திடப்படுத்திக்கொள்ளுகிறோம்.—4 அன்பர்கள்.

2 என்னிடமுள்ள முன்கோபத்தை குருநாதர் ஆசியாலும் அடியார்களுடைய ஆசியாலும் நீக்குவதற்குத் தெண்டிக்கிறேன். ஒரு அன்பர்.

3 நித்தமும் பிரார்த்தனையைக் குருநாதருடைய ஆசீர்வாதத்தாலும் அடியார்களுடைய ஆசீர்வாதத்தாலும் தவறாது செய்யத் தெண்டிக்கிறோம்.—மூன்று அன்பர்கள்.

4 பிறர் குறைபேசுவதைநிறுத்துவதற்கு குருநாதர்களுடையவும் சத்சங்கத்துடையவும் ஆசியைவேண்டிநிற்கிறோம்,—இரு அன்பர்கள்.

5 பொய்பேசாமை, புறங்கூறாமை, பயனில்சொல்லாமை, குணங்கண்டு பேசுதல் இவை நிறைவேறக் குருநாதர்களுடைய ஆசியை வேண்டுகிறோம்.—ஆறு அன்பர்கள்.

6 புகைத்தல், தேநீர், காப்பி முதலியன அருந்தல் ஆகிய வழக்கங்களை இன்றுதொடக்கமாக நிறுத்திக்கொள்ளுகிறோம்.—ஆறு அன்பர்கள்.

7 தினக்குறிப்பு எழுதி வருடமுடிவில் குருநாதரிடம் சமர்ப்பிக்கிறேன்.—ஒரு அன்பர்.

8 அடியார் தொண்டுசெய்து யோகவாழ்க்கை நடாத்த உத்தேசம். பூரண பிரமச்சாரியம்கொண்டுவாழச் சங்கற்பித்துள்ளேன்.—ஒரு அன்பர்.

9 நற்கருமம் செய்யப் பின்வாங்கோம். கெட்டகுணங்கள் எல்லாவற்றையும் ஒழித்துவிடுவதாகச் சங்கற்பித்துள்ளோம் செய்த பிழைக்கு மன்னிப்புக் கோருகிறோம்.—இரு அன்பர்கள்,

10 வாழ்க்கைப் போராட்டங்களை வெல்வதற்கு அஹிம்சையையே ஆயுதமாகக் கொண்டு தீண்டாமைப்பேயை நீக்க முயல்வேன் —ஒரு அன்பர்.

11 ஆத்மஜோதியின் நற்கொள்கை எங்கும்பரவ இயன்றன செய்வேன்,—ஒரு அன்பர்.

"கருணைப் பெருமானே கனகச் சுடரோனே
அருணோ தயம்போலெம் அறிவிற் பொலிவோனே
திருவார் குருநாதா சிவனேயென உள்ளம்
உருகும் பெருவாழ்க்கை உடையார் பெரியாரே"
(சுத்தானந்தர்)

> கந்தரனு பூதிபெற்றுக் கந்தரனு பூதிசொன்ன
> வெந்தையரு ளடியிருக்குநா ளெந்நாளோ.
>
> —தாயுமான சுவாமிகள்,

முன் தொடர்ச்சி

# — சாதகற்குத் துணை. —

சுவாமி ஸ்ரீ ராம்தாஸ் அவர்களின் ஆங்கில நூல்களில் இருந்து திரட்டிய
"Guide to Aspironts" என்னும் நூலின் மொழிபெயர்ப்பு
(மொழிபெயர்ப்பு—விசாகர்)

## உண்மையை நோக்கு.

மங்கிப்போகும் வாழ்க்கைச் சித்திரத்தில் உள்ள பொருள்கள் யாவும் மாறியும் மறைந்தும் போகக்கூடியவை. நாம் என்றும் ஐக்கியப்பட்டுள்ள இறைவன் ஒருவனே உண்மை.

வாழ்வின் வெளிவிஷயங்களிலிருந்து சுதந்தரத்தையும் சாந்தியையும் தேடவேண்டாம். ஏனெனில் உன்னுள் உறையும் இறைவனோடு இசைந்திருக்கும்போதுள்ள மனத்திலேதான் உண்மைச் சுதந்தரம் இருக்கிறது. வாழ்வில் உள்ள ஒவ்வொரு துன்ப நிகழ்ச்சியும் உன்னை மேலும் மேலும் கடவுளை நோக்கச் செய்யட்டும். இதனால் எவ்வகையான வெளித்தாக்குதலும் உன்னைப் பாதிக்க மாட்டாது. முழுவலிமையோடும் நம்பிக்கையோடும் இறைவன் நாமத்தைப் பிடித்துக்கொள். குளிக்கும்போதானாலும் தெருவில் நடக்கும்போதானாலும் அடுக்களை வேலையின்போதானாலும் கச்சேரியில் தொழில் ஆற்றும்போதானாலும் எந்நேரத்திலும் இடைவிடாமல் நாமஜெபம் செய். நீ தப்புவதற்கு இதுவேவழி. இதை உறுதியாக நம்பி நாமத்திடம் அடைக்கலம் புகு.

கடவுள் என்றுமுள்ள உண்மை. மனிதன் வழக்கமாக ஈடுபட்டுள்ள எல்லாவற்றினும் அவன் அதிக உண்மை. உலகப்பேறுகளில் மனிதன் ஆசைகொண்டிருப்பதினால் தனது அழிவிலா உண்மையை அறியமுடிகிறதில்லை புலன்கள் தரும் இன்பங்களில் அவன் ஆழமாக அகப்பட்டிருப்பதால் நித்தியானந்த சாந்த நிலையின் உன்னத அனுபவத்தைப் பெறமுடிகிறதில்லை.

ஆனதால் அன்பனே! உன்னுடைய தெய்வக் கர்த்தாவோடு உன் வாழ்வு இணைக்கப்படாவிடின் அது வீணானதே.

வாழ்க்கையோ குறுகியது. அதில் நீ அனுபவிக்கும் இன்பங்கள் மாறிமறைவன. இந்நிழல்களைத் தொடர்வதினால் இருள் சூழப்பட்டு உன்னுடைய உண்மை நிலையான உயர்ந்த நித்தியானந்த உண்மைப்பொருளை உணரமுடிவதில்லை.

புறநிலைகளில் இன்பத்தைத் தேடுவதினால் மனிதன் துன்பப்படுகிறான், அவன் உள்ளம் அவாவும் பூரணநிலையைக் கொடுக்கக்கூடிய இயல்பு அவைகளுக்கில்லை

உன்னுடைய மனோநிலையைப் பொறுத்தே இன்பமோ துன்பமோ அமைந்திருக்கிறது. வெளிநிலைமைகளையும் தன்மைகளை

களையும் பொறுத்தல்ல. ஆசைகளினால மனம் தாண்டப்பட்டு பொருளுக்குப் பொருள் தாவிக்கொண்டும் அவைகளின் உடைமைக்கும் அனுபவத்திற்கும் அவாவிக்கொண்டு துன்பமேயான அமைதியின்மையில் சஞ்சரிக்கிறது, அவைகளை உடைமையாக்கியபின் கவலையும் கிலேசமும் வருகிறது. அதில் நீ அடையும் அற்ப சந்தோஷம் பரந்த இருட்டில் இமைக்கும் சிறு வெளிச்சத்தைப்போலுள்ளது. மறுகணம் அது அணைந்து உன்னை இன்னுங் கூடுதலான இருளுக்குள்ளாக்கும். நீ அவாவும் பொருள் அழியக்கூடியது மாறக்கூடியது. இதை அறி. ஆகையால் நித்தியா சந்தம் அதில் கிடைப்பது எங்ஙனம்? ஆகவே நிலையற்ற சதா மாறுகின்ற உருவங்களிலும் பொருள்களிலும் மனஞ் சஞ்சரிக்கும்போது துன்பத்தையே அனுபவிக்கிறது. ஆனபடியால் உனது நோக்கை உள்முகமாக்கி கடவுளை அங்கே காண். அதுவே சகல இன்பத்திற்கும் சாந்தத்திற்கும் இருப்பிடம்.

ஆசை அலைகள் எழாத உள்ளத்திலேதான் சாந்தம் உள்ளது அதிருப்தி, குழப்பம், துயர் இவைகட்குக் காரணமாய் உள்ளத்தில் பதித்திருக்கின்ற சகல ஆசைகளையும் பூரணமாய் அடக்குவதே உள்ளத்தின் அவா. ஒன்றும் வேண்டா அமைதி—தானேயான—அமைதி—நிரந்திர அமைதி—அமைதி—அமைதி—அ மை தி—இதுவே உள்ளத்தின் வேட்கை. இந்த நித்திய அமைதியே உனது உண்மை நிலை. இது அடைதற்குரிய நிலையோ உண்மையோ அல்ல. இது அனுபவிக்கப்படவேண்டியது. ஏனெனில் நீ என்றும் அதுவாயிருக்கிறாய்.

மாறுபடக்கூடிய அழியக்கூடிய பொருள்கள் எல்லாம் அமைதியைக் கொடுக்கமாட்டா, உனக்கு அமைதி வேண்டுமாயின் உனது நித்திய மூலப்பொருளான இறப்பில்லாத மாறுபாடில்லாத உண்மைப்பொருளுக்கு மனத்தைத் திருப்பு. உறுதியான தாரணை தியானத்தால் எண்ணத்தை உண்மைப்பொருளோடு இசைத்துக்கொள். இறுதியாக அந்தத் தெய்வ நிலைக்கு அதை உயர்த்தி மாறுபாடறியா நித்திய சாந்தத்தைப் பெறு.

ஆயிரம் வருஷங்கட்கு நாம் ஜீவிக்கலாம். உலகில் விரும்பியதெல்லாவற்றையும் நாம் பெறலாம். ஆனல் உலகப்பொருள்கள்மேலுள்ள ஆசைமடியும்வரை நாம் சந்தோஷமாய் இருக்க இயலாது.

ஆத்மானந்தத்திற்காக நீ மேல்மாடியில் இருந்தாலென்ன அல்லது ஊர்சுற்றும் ஆண்டி ஆனல் என்ன மனத்திலும் புத்தியிலும் எழும் ஆசைகளை ஒழித்து அவ்வானந்தத்தை அனுபவி.

---

# கந்தரனுபூதி.

—:—:—

[இதுவரை எத்தனையோ முருகபக்தர்கள் கந்தரனுபூதிக்கு விரிவுரை செய்துள்ளார்கள். ஒவ்வொருவரும் அனுபூதியில் எவ்வளவு அனுபூதியடைந்தார்களோ அதற்குத் தக உரையும் இருந்தது. இன்று "முருகா" என்ற திருப்பெயரையே தாரகமாகக் கொண்டு இலங்கையிலும் இந்தியாவிலும் வீழ்நாள்படாது முருக நாமபஜனை செய்துவரும் சாது ஸ்ரீ முருகதாஸ் அவர்களை அறியாதவரிரார். அவர் அனுபூதியில் அனுபூதியடைந்தமையைத் திருத்தணியில் வருடந்தோறும் மார்கழி மீ 31-ந்தேதி நடக்கும் அனுபூதிப் பஜனை ஒருமுறை கேட்டவர் அறிவர். அத்தகைய பெரியார் கந்தரனுபூதிக்குப் புது அமைப்பில் விரிவுரை எழுதி ஆத்மஜோதியில் தொடர்பாய் வெளியிட மனம் இசைந்த சந்தோஷத்தை ஆத்மஜோதி அன்பர்களுக்கு அன்புடன் அறியத்தருகிறோம்.]

**காப்பு**

1 நெஞ்சக் கனகல் லுநெகிழ்ந் துருகத்
2 தஞ்சத் தருள்ஷண் முகனுக் 3 கியல்சேர்
செஞ்சொற் புனைமாலை சிறந்திடவே
4 பஞ்சக் கரவானை பதம் பணிவாம்.

(2) ஷண்முகா சரணம் என்று தன்னை அண்டின அடியாரின் உள்ளம் குளிர அருள்புரியும் அண்ணலுக்கு (1) கல்லிலும் கடினமானதும் பெரியதுமான நெஞ்சம் நெருப்பின்முன் மெழுகு போல் உருகும்படி செய்யவல்ல (3) அழகும் அன்பும் நிறைந்த சொல்லாலான பாமாலை சிறந்ததாகவும் அவனுக்கு உகந்ததாகவும் விளங்க (4) ஐந்து தொழிலுக்கும் மூலனான சித்திவிநாயகன்பாதம் பணிவோமாக. (பணிவேன்)

**குறிப்பு.**

விசித்திர வேலைப்பாட்டுடன் வேலைசெய்யும் பூக்கடைக் காரனிடமும் கூட நம் நாயக நாயகிகளுக்கு ஏற்றவாறு மாலையோ செண்டோ கட்டச்சொல்லிச்சரிபார்த்து சந்தேகமற்றபின் சேரவேண்டிய இடத்தில் சேர்க்கிறோம். (அதுபோல்) ஸர்வத்திற்கும் ஆதிகாரணனை விநாயகக்கடவுளை நம் உரிமை நாயகனான முருகன் அழகுக்கு ஏற்றதான சொற்பாமாலையில் அன்புத்தேன் ஊற கட்டித்தரும்படியும் கட்டிய பாமாலை சிறந்ததாக விளங்கவும் விநயத்துடன் அவன்தாள் வணங்கி வேண்டுகிறோம். (வேண்டவேண்டும்).

# திருக்கேதீஸ்வர ஆலயத் திருப்பணி.

—:—:—:—

இந்தத் திருப்பணிச்சபையின் பிரதிநிதிகள் (22-4-49) கண்டி வந்து, அங்கே திருவாளர் C. கல்யாண சுந்தரன் அவர்களின் தலைமையில் கூடிய அகில இலங்கை ஓவசியர்கள் சங்கத்தினருக்கு திருக்கேதீஸ்வர ஸ்தலத்தின் பழம் பெருமையைக்குறித்தும், சைவ சமயிகள் அதன் புனருத்தாரணத்திற்காகச் செய்யவேண்டியுள்ள கடமை பற்றியும் எடுத்துரைத்தனர். தலைவரும், திருவாளர்கள் N. A. வைத்தியலிங்கமும் K. வேலுப்பிள்ளையும் தங்கள் சங்கத்தின் ஆதரவை ஆர்வத்துடன் வெளியிட்டனர்,

அதேதினம் மாலை ஆறுமணிபோல் கண்டி இந்துப் பிரமுகர் பலர் மேற்படி பிரதிநிதிகளுடன் கலந்துகொண்டு இச்சிவதொண்டில் ஒத்துழைப்பதற்காக ஓர் நிர்வாகசபையை நியமித்தனர்.

## திருப்பணி நிதிக்கணக்கு.

| | | |
|---|---|---|
| | சென்றமாச வெளியீட்டின்படி ஆறு அபிமானிகள் மொத்தத் தொகை: | 6006-00 |
| 7 | திரு. சு. சிவபாதசுந்தரம் அவர்கள் [திருப்பணிச் சபைத்தலைவர்] | 2500-00 |
| 8 | திரு. V. A. கந்தையா அவர்களும் அவர் பாரியாரும் | 1001-00 |
| 9 | திரு. க. இராமச்சந்திரன் அவர்களும் அவர் பாரியாரும் | 500-00 |
| 10 | திரு. அ:சிற்றம்பலம் அவர்களும் அவர் பாரியாரும் | 500.00 |
| 11 | திரு. C. S. துரையப்பா அவர்களும் அவர் பாரியாரும் | 500-00 |
| 12 | திரு. வ. க. முத்தையாபிள்ளை அவர்களும் சகோதரர்களும் | 1001-00 |
| 13 | டக்டர் ச. இராசேந்திரம் அவர்களும் அவரது பாரியாரும் | 1001-00 |
| 14 | திரு. செ. சரவணமுத்து அவர்கள் | 1001.00 |
| | | 14010-10 |



| | | |
|---|---|---|
| | முன்பக்கப்படி | 14010-00 |
| 15 | திரு. S. K. விஜயரத்தினம் அவர்களும் அவரது பாரியாரும் | 1001-00 |
| 16 | அ. பாலசுந்தரம் அவர்களும் பாரியாரும் | 236-00 |
| | மொத்தம் | 15247-00 |

[திரு. சு. சிவபாதசுந்தரம் அவர்கள் இத்திருப்பணிக்கென சில வருஷங்கட்கு முன்னர் ரூ. 3000/– உதவியுள்ளார்].

வேதமுடன் ஆகமு மானாய் போற்றி
வேதாந்தச் சித்தாந்தப் பொருளே போற்றி
சூதமுனி புகழ்ந்துரைத்த சிவனே போற்றி
துவட்டாவின் கலிதீர்த்த துரையே போற்றி
கேதுவந்து பூசித்த கோவே போற்றி
கேட்டவரம் ஈந்தருளுங் கையா போற்றி
மாதொருபா கத்தமர்ந்த மணாளா போற்றி
மாதோட்ட மாமணியே போற்றி போற்றி.

—க. இ.

## மக்கட்கு அறிவுரை

மக்களே! நீவிர் உம் கண்முன்னே நேற்று உயிரோடிருந்தவர் இன்று இறக்கக்கண்டும், அதனை யுணராது வீணே காலம் கழிக்கின்றீர்.

இன்றுள்ளார் நாளை இல்லை யெனும் பொருள்
ஒன்றும் ஓராது உழிதரும் ஊமர்காள். 198.9

⁂ ⁂ ⁂ ⁂

மக்களே! நீங்கள் கடவுளை நினைத்தால் உங்கட்கு அறம் பெருகும்; பொய்த்தன்மை நீங்கும்; அறிவு வளரும்.

பூரியாவரும் புண்ணியம் பொய்கெடும்
கூரிதாய அறிவுகை கூடிடும். 191.1

⁂ ⁂ ⁂ ⁂

மக்களே! உங்கள் வாழ்நாள் கழிவதன்முன்னமே கடவுளை உங்களால் இயன்றவழியில் வணங்குங்கள்.

காலமான கழிவதன் முன்னமே
ஏலுமாறு வணங்கி நின்றேத்துமின். 157.9

# செய்தித் திரட்டு.

—;—;—

**சாதனுவாரம்** இலங்கையில் முதன் முதல் சாதனுவாரம் திருக்கேதீஸ்வரத்தில் 13-4-49—18-4-49 வரை நடைபெற்றது.

**சுவாமி ஸ்ரீ இராமதாஸரின் ஜெயந்தி** ஆனந்தாஸ்ரமம் சுவாமி ஸ்ரீ இராமதாஸர் அவர்களின் ஜெயந்தி வெள்ளவத்தை சைவ மங்கையர்கழக வித்தியாசாலையில் 24-4-49ல் நடந்தது. ஸ்ரீ முருகதாஸர்—பஜனை. பாலசுவாமி இராமதாசர்—இறைவன் நாமமகிமை. சுகப்பிரமம் திரு. எஸ். இராமசாமி சாஸ்திரிகள்—குருபக்தி. திரு. கே. இராமச்சந்திரன் குழந்தைகள்—பக்திப்பாடல்கள். செல்வி இராஜேஸ்வரி நாகலிங்கம்—குருதோத்திரம். ஸ்ரீமதி விவேகானந்தன்—தோத்திரங்கள்.

**திருநாவுக்கரசுநாயனர் குருபூஜை விழா** ஷை குருபூஜை விழா 23-4-49 சனிக்கிழமை தெல்லிப்பழை பாலர் ஞானோதய சபை ஆதரவில் காசிவிநாயகர் ஆலயத்தில் நடைபெற்றது. திரு. எம். எஸ். சிதம்பரப்பிள்ளை அவர்கள் நாயனரின் சரித்திரம் பற்றிச் சொற்பொழிவாற்றினர்கள்.

**சுவாமி விபுலானந்த அடிகளின் நினைவுமண்டபம்** ஷை நினைவுமண்டபத் திறப்புவிழா 12-5-49 வியாழக்கிழமை அக்கரைப்பற்றில் நடைபெற்றது.

**இந்தியாவிலிருந்து சாதனுவாரத்திற்காக இலங்கை வந்த மகான்களின் விசேட நிகழ்ச்சிகள்.**

26-4-49—நாவலப்பிட்டி இந்துவாலிப சங்கம்—உபந்நியாசங்களும் பஜனையும்

27-4-49—கண்டி சைவமகாசபை—உபந்நியாசங்களும் பஜனையும்

29-4-49—கொம்பனித்தெரு ஸ்ரீ சுப்பிரமணிய சுவாமி கோயில்—உபந்நியாசங்களும் பஜனையும்

3-5-49—வெள்ளவத்தை மாணிக்கர் விநயகர் ஆலயம்—உபந்நியாசங்களும் பஜனையும்

6-5-49—நாவலப்பிட்டி இந்துவாலிபசங்கம்—கூட்டுப்பிரார்த்தனை

8-5-49—வதுளை சைவபரிபாலன சங்கம்—உபந்நியாசமும் பஜனையும்

9-5-49—கற்றன் சைவமகாசபை—உபந்நியாசமும் பஜனையும்.

---

# அன்பர்களுக்கு.

1 ஆத்ம ஜோதி சம்பந்தமாக கடிதம் எழுதும் அன்பர்கள் தயவு செய்து தங்கள் சந்தா இலக்கத்தையும் குறித்து எழுதும்படி கேட்டுக்கொள்ளப்படுகின்றார்கள்.

2 இந்தியாவிலிருந்து சந்தா அனுப்பும் அன்பர்கள் தங்கள் தெளிவான விலாசத்துடன் பிறம்பான கடிதம் ஒன்றும் எழுதும்படி கேட்டுக்கொள்ளப்படுகின்றார்கள்.

3 ஜோதியின் நோக்கத்திற்கு மாறுபடாதவகையில் மக்களுக்கு பயன்படக்கூடியதாக விஷயதானம் செய்வோரது விஷயங்களைச் ஜோதி மகிழ்வுடன் ஏற்றுக்கொள்ளும். இந்தமாசத்தில் அனுப்பப்பட்ட விஷயம் இந்தமாசத்திலோ அன்றி அடுத்த மாசத்திலோ வெளிவந்துவிடுமென எதிர்பார்த்திருக்கவேண்டாம். சில விஷயங்கள் ஆறுமாசத்தின்பின்னும் வெளிவரலாம். தாங்கள் அனுப்பிய விஷயம் தேவையானேர் தகுந்த தபால் முத்திரையுடன் எழுதினல் அவர்களுக்கு அவை திருப்பி அனுப்பிவைக்கப்படும்.

**குங்குமம்** பெண்களின் இனிய செந்தமிழ் மாதப் பத்திரிகை

தாய்மாரின் வாழ்க்கைக்கு ஓர் வழிகாட்டி

ஒவ்வொரு குடும்பத்திலும் அவசியம் இருக்கவேண்டியதோர் சஞ்சிகை.

ஆசிரியை: எஸ். விசாலாக்ஷி

முரளி, பச்சையப்பன் ஹாஸ்டல் ரோட், சென்னை 10

## அறிவிப்பு.

அன்புடையீர்!

"சுகாஸ்ரம நித்திய பிரார்த்தனை"

என்னும் பாமாலையை விரும்பும் அன்பர்கள் அடியில் கண்ட விலாசத்திற்கு எழுதினல் இலவசமாய் அன்பர்களுக்கு தபாலில் அனுப்பப்படும்.

தங்கள் அன்பன்,
**சுகதாஸ்.**

விலாசம்:
**சுகதாஸ்-சுகாஸ்ரமம்**
புலியூர் P.O.
(சிக்கல் வழி)
தஞ்சாவூர் ஜில்லா, S I Ry.

Registered in the G. P. O. as News Paper.


# ANANTHASTRAMA BOOK DEPOT;

Kandy Road, Chavakachcheri,

ஆனந்தாஸ்ரம புத்தகசாலை

புத்தகம் படம், கண்ணாடி வியாபாரம்

கண்டிரோட், சாவகச்சேரி.

இப்புத்தகசாலையில் பலவிதமான படங்கள், கண்ணாடிகள், பெரியோர்களின் அரும்பெரும் நூல்கள், சுவாமி சுத்தானந்தர், பகவான் ரமணமகரிஷி, சுவாமி இராமதாஸ், அன்னை கிருஷ்ணா பாய், அரவிந்தகோஷ் இன்னும் அனேகம் பெரியோர்களின் புத்தகங்கள் மிகவும் மலிவான விலைக்குப் பெற்றுக்கொள்ளலாம்.

எங்கள் வியாபார நோக்கம் ஆனந்தாஸ்ரம முன்னேற்றத்திற்காக வென்பதை அன்பர்கள் யாபேருக்கும் அறியத்தருகிறோம். எனவே, அன்பர்கள் யாவரும் எம்மை ஆதரிக்கும் வண்ணம் அன்புடன் வேண்டுகின்றோம்.

இங்ஙனம்

சாவகச்சேரி. S. T. S. சிவநேசன்,

22-3-49. ஆச்சிரமத்தொண்டன்.

---

வள்ளலார் வைகாசி 11 உ வைபவ நினைவாக

10 ரூபா புஸ்தகங்கள் ரூபா 6 8 0 க்கு

| | |
|---|---|
| வடலூர் இராமலிங்க சுவாமிகள் விரிவான நூல் | 5 0 0 |
| சுவாமிகளும் நாவலரும் | 1 0 0 |
| சுவாமிகள் சரித்திரமும் இந்துக்களும் | 1 0 0 |
| வள்ளலார் மறைவும் வரவும் | 0 5 0 |
| சிதம்பர க்ஷேத்திர மகிமை | 0 5 0 |
| பழனி க்ஷேத்திர மகிமை | 0 12 0 |
| திருத்தணி க்ஷேத்திர மகிமை | 0 8 0 |
| அதிர்ஷ்டம்—நல்லகாயம் | 0 2 0 |
| | 10 0 0 |

இன்றே எழுதுங்கள்

## மணி அருள்சோதி ஆசிரமம்

3. பாவாமுதலிதெரு

சிதம்பரம்.


கௌரவ ஆசிரியர்: க. இராமச்சந்திரன்.

பதிப்பாசிரியர், கா. முத்தையா, ஆத்மஜோதி நிலயம், நாவலப்பிட்டி, சிலோன்.

நாவலப்பிட்டி, சரவண பிரஸில் பதிப்பித்தது. 14-5-49. 2000 பிரதிகள்.